0317

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சமூக கற்கைகள் துறை
விஞ்ஞானமாணிப் பட்டப்படிப்பு - மட்டம் 3
இறுதிப் பரீட்சை - 2025/2026 (இரண்டாம் அரையாண்டு)
DSU3298 - இலங்கை சமூகம் - அறிமுகம்
காலம் : இரண்டு மணித்தியாலங்கள் (02 மணித்தியாலங்கள்)

திகதி: 30.11.2025 **நேரம்: பி.ப. 01.30 முதல் பி.ப. 03.30**

- நான்கு (04) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்கவும்.
- ஒவ்வொரு வினாவிற்கும் 25 புள்ளிகள்.

01. காலனித்துவவாதிகள் இலங்கையில் தமது கவனத்தை செலுத்த வழிவகுத்த காரணங்கள் யாவை? உதாரணங்களுடன் விளக்குக.

02. 1833 ஆம் ஆண்டின் கோல்புறூக்-கேமரன் சீர்திருத்தங்கள் இலங்கை சமூகத்தில் ஏற்படுத்திய விளைவுகளை விளக்குக.

03. பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதி அரசாங்க முறைகளின் பிரதான அம்சங்களை பொருத்தமான உதாரணங்களுடன் ஒப்பிட்டு வேறுபடுத்துக.

04. அரை ஜனாதிபதி அரசாங்கம் என்றால் என்ன? உதாரணங்களுடன் விளக்குக.

05. ஒரு பல்கலாச்சார சமூகம் என்ற வகையில் இலங்கை சமூகத்தின் பன்முகத்தன்மையை உதாரணங்களுடன் கலந்துரையாடுக.

06. ‘சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டுமானால் அதிகாரப் பிரிப்பு இருக்க வேண்டும்’ என்பதை மொன்டேஸ்கியூ வலியுறுத்தினார். இந்த கூற்றை உதாரணங்களுடன் கலந்துரையாடுக.

07. இலங்கையில் சிங்கள மற்றும் தமிழ் உறவுமுறை அமைப்புகளுக்கிடையிலான ஒற்றுமைகள் மற்றும் வேறுபாடுகளை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

08. சமகால இலங்கையில் சமூக நகர்வை பாதிக்கும் பிரதான காரணிகளை விளக்குக.

09. பின்வருவனவற்றுள் ஏதேனும் நான்கு (04) பற்றி சிறு குறிப்பு எழுதுக:

a. டச்சு சட்ட முறைமை
b. இலங்கையில் இன அடையாளங்கள்
c. தனிச்சிங்களச் சட்டம்
d. கூட்டுப் பொறுப்பு
e. சமகால இலங்கையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்கு
f. முஸ்லிம் உறவுமுறை அமைப்பு
G. புவி வெப்பமடைதல்

*************** *பதிப்புரிமையுடையது* ***************